பக்கங்கள்: நான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 8 திருவள்ளுவர் ஆண்டு 2023 வைகாசி 04 திங்கட்கிழமை (17-05-1993) UTHAYAN—A Lively National Tamil Daily கதிர் 170

# விஜேதுங்கவுடன் நிபந்தனையின்றி பேச்சு நடத்துவதற்கு புலிகள் தயார்!

## பாரிஸில் நேற்று அறிவிப்பு

லண்டன், மே 17

ஸ்ரீலங்காவின் புதிய ஜனாதிபதி டி. பி விஜேதுங்காவுடன் நிபந்தனை எதுவுமின்றி சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு விடுதலைப் புலிகள் தயாராக இருப்பதாக அறிவிக்கப்படுகிறது

பிரான்ஸின் தலைநகர் பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகள் இயக்கத்தின் சர்வதேச அலுவலகப் பேச்சாளர் ஒருவர் இத்தகவலை வெளியிட்டதாக பி.பி.ஸி. தெரிவித்தது.

இது குறித்து கொழும்பில் இருந்து பி. பி. ஸி. செய்தியாளர் பியாக்கோ நுவாஸ் அனுப்பிய செய்திக் குறிப்பு வருமாறு:-

விடுதலைப் புலிகள் இயக்கம் வடக்கு - கிழக்கு யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வர புதிய ஜனாதிபதி விஜேதுங்காவுடன் சமாதானப் பேச்சுக்களைத்துவக்க தயாராக இருப்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## உகந்த சூழ்நிலை உருவாக்குவது பேச்சின் வெற்றிக்கு வழிவகுக்கும்

### பி.பி.ஸிக்கு திலகர் பேட்டி

லண்டன், மே 17

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைகளுக்கு எப்போதும் தயாராகவே உள்ளனர்.

ஆனால் —

பேச்சுவார்த்தை ஒழுங்காக நடைபெற — வெற்றிபெற வேண்டுமானால் அதற்குரிய உகந்த சூழ்நிலையை அரசு தான் உருவாக்க வேண்டும்.

இவ்வாறு பாரிஸில் உள்ள விடுதலைப் புலிகள் பிரமுகர் திரு. லோறன்ஸ் திலகர் தெரிவித்துள்ளார்.

நிபந்தனை இன்றி பேச்சுகள் நடத்த விடுதலைப் புலிகள் முன் வந்துள்ளது குறித்து திரு லோறன்ஸ் திலகர் பி. பி. ஸிக்கு தொலைபேசி

4 ஆம் பக்கம் பார்க்க)

## மாகாண சபைத் தேர்தல்கள் இன்று

வடக்கு - கிழக்கு தவிர்ந்த ஏழு மாகாணங்களிலும் இன்று தேர்தல்கள் நடைபெற விருக்கின்றன.

இத்தேர்தல்களில் 70 சதவீதமான வாக்காளர்களே வாக்களிக்கலாம் என்று எதிர்பார்க்கப்படுவதாக பி. பி. ஸி. தெரிவித்தது.

தென்இலங்கை அரசியலில் முக்கிய திருப்பமாக கருதப்படும் இத்தேர்தலில் போட்டியிடும் அரச - எதிர்கட்சி ஆதரவாளர்கள் நேற்று இரவுவரை வாக்கு வேட்டையில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தேர்தல்களின் போது ஏதாவது அசம்பாவிதங்கள் இடம் பெறாமல் கவனிக்க 50 ஆயிரம் பொலீஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

இதேவேளை தேர்தல் தொடர்பாக 300 முறைப்பாடுகள் இதுவரை கிடைத்துள்ளன என்று தேர்தல் ஆணையாளர் தெரிவித்தார்.

## நிறைவேற்று ஜனாதிபதி முறை தொடருவதா? இல்லையா?

### சர்வஜன வாக்கெடுப்பு மூலம் முடிவு செய்யலாம் என்கிறார் டி- பி.

கொழும்பு, மே 17

நிறைவேற்று ஜனாதிபதி அமைப்பைத் தொடருவது குறித்து சர்வஜனவாக்கெடுப்பு நடத்தப்படலாம்.

ஜனாதிபதி டி. பி, விஜேதுங்கா கண்டியில் செய்தியாளர் மாநாட்டில் முன்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் பேலும் சொன்னதாவது:-

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறையை ஆராய அரசாங்கம் நாடாளுமன்றத் தெரிவுக் குழு ஒன்றை நியமிக்கலாம்.

பொதுக்கருத்தை அறிய சர்வஜன வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி நிறைவேற்று ஜனாதிபதி அமைப்பு முறையின் எதிர்காலம்பற்றி தீர்மானிக்க வேண்டி ஏற்படலாம்.

### விவாதிக்க தயாராம்

நிறைவேற்று ஜனாதிபதி முறையை மாற்றி அமைப்பது குறித்து விவாதிக்க தாம் தயாராக இருப்பதாக ஜனாதிபதி டி. பி விஜேதுங்கா "சண்டே ஒப்சேர்வருக்கு" அளித்த பேட்டி ஒன்றில் தெரிவித்தார்.

நிறைவேற்று ஜனாதிபதி அமைப்பு முறை குறித்து நான் திறந்த மனதுடன் உள்ளேன். முற்றுமுழுதான அதிகாரத்தை என்வசம் வைத்திருக்க நான் விரும்பவில்லை. அதிகாரம் ஊழல் புரிகிறது. நான் மிதவாதப் போக்கில் நம்பிக்கை கொண்டுள்ளேன்.

ஜனாதிபதி அமைப்பு முறையை மாற்ற வேண்டும் என்று இப்போது எதிர்க்கட்சிகள் விரும்புகின்றன. சிலர் இந்த முறையை நீடிக்கவேண்டும் என்று விரும்புகின்றனர்.

4 ஆம் பக்கம் பார்க்க)

## செஞ்சிலுவை அதிகாரிகள் இளவாலைக்கு விஜயம்

இளவாலை, மாதகல் பகுதிகளில் சிக்கியுள்ளவர்களின் நலன்களைப் பார்வையிட செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு அதிகாரிகள் குழு ஒன்று நேற்று அங்கு சென்றுள்ளது.

நான்கு அதிகாரிகள் கொண்ட அந்தக் குழுவினர் குமண கப்பல் மூலம் நேற்று மாலை அங்கு புறப்பட்டுச் சென்றனர்.

இளவாலை, மாதகல் பகுதிகளில் உள்ளவர்களின் மருத்துவ வசதிகளை இன்று இக்குழுவினர் கவனிப்பர்.

அங்கு சிக்கியுள்ள சிலரை இங்கு அழைத்து வரவும் அவர்கள் முயற்சி செய்வர் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஒ 3)

## ஆரையம்பதி சந்தையில் குண்டு கண்டுபிடிப்பு!

### 'ஜிகாத்' குழுவின் வேலையென தகவல்

யாழ்ப்பாணம், மே 17

மட்டக்களப்பு ஆரையம்பதி சந்தையில் 'ஜிகாத்' முஸ்லிம் குழுவினரால் வைக்கப்பட்ட குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்கச் செய்யப்பட்டது.

ஆரையம்பதி தமிழர்கள் அதிகமாக வாழும் கிராமம் என்பது குறிப்பிடத்தக்கது.

கடந்த 11ஆம் திகதி பொது மக்கள் தெரிவித்த தகவலின் பேரிலேயே படையினர் அந்தக் குண்டை செயல் இழக்கச் செய்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

குண்டு வெடித்திருந்தால் பெரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டிருக்கும் என்று ஊர் மக்கள் தெரிவித்தனர். (ஒ-3)

## பிரேமா கொலைச் சம்பவம்: பெண்களும் விசாரணையில்

### கொலையாளியுடன் தொடர்பாம்

கொழும்பு, மே 17

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவைக் கொலை செய்த தற்கொலை வீரர் என்று கருதப்படும் பாபு என்பவருடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்ததாகக் கூறப்படும் பெண்கள் பலரும் விசாரணைக்குட்படுத்தப் பட்டுள்ளனர்.

இந்தப் பெண்கள் வாழைத்தோட்டப் பகுதியைச் சேர்ந்தவர்களாவர்.

இப் பெண்கள் பாபுவுடன் மிக நெருக்கமாகப் பழகியவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

தற்போது கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டவர்களிடம் இருந்து எந்த முக்கிய தடயங்களும் கிடைக்கவில்லை என்று பொலீஸார் தெரிவித்தனர்.

(ஒ எ)

## ஜனாதிபதியின் பாதுகாப்பு ரவி ஜெயவர்த்தனாவிடம்

லண்டன், மே 17

ஜனாதிபதிக்கு பாதுகாப்பு அளிக்கும் பணி இராணுவத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளது. இந்த இராணுவப் பிரிவுக்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மகன் ரவி ஜெயவர்த்தனா பொறுப்பாக நியமிக்கப்படுவார் என நம்பிக்கையான வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியில் மேற் கண்டவாறு கூறி உள்ளார். 'லக்திவ' இணை ஆசிரியர் விஜிதெற்றிகொட.

விஜேதுங்க புதிய ஜனாதிபதியாகப் பதவி ஏற்ற பின்னர், பிரேமதாசாவின் ஆட்சி முறையைவிட தமது ஆட்சி முறை வித்தியாசமானது என நாட்டுக்குக் காட்டிக் கொள்ள முயற்சித்து வருகிறார்.

பிரேமதாசாவின் கிராமோதயக் கொண்டாட்டத்தை இம்முறை சாதாரணமான முறையிலேயே நடத்த தீர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## தமிழக அமைச்சரவையில் மாற்றம்; வீரப்பன் மீண்டும் அமைச்சரானார்!

### அரங்கநாயகம், அழகு திருநாவுக்கரசு 'அவுட்'

தமிழக அமைச்சரவையை முதலமைச்சர் செல்வி ஜெயலலிதா நேற்று மாற்றி அமைத்தார்.

முக்கிய அமைச்சர்களான திரு. அரங்கநாயகம், திரு. அழகு திருநாவுக்கரசு மற்றும் திரு. ஜி. விஸ்வநாதன் ஆகியோர் அமைச்சரவையில் இருந்து நீக்கப்பட்டனர்.

புதிய அமைச்சர்களாக இராம வீரப்பன், கு. ப. பட்டாபிராமன், பேராசிரியர் பொன்னுச்சாமிபிள்ளை உட்பட 12 பேர் புதிய அமைச்சர்களாக நியமிக்கப்பட்டனர்.

முதலமைச்சரின் [illegible] இணங்க மாநில [illegible] அமைச்சரவை மாற்றத்தை நேற்று அறிவித்தார்.

புதிய அமைச்சர்கள் இன்று மாலை பதவிப் பிரமாணஞ் செய்து கொள்வார்கள்.

இராம. வீரப்பன் உணவு மற்றும் சிவில் சப்ளை அமைச்சராக [illegible] புதிய அமைச்சர்கள் வருமாறு:

திருவாளர்கள் துரை இராமசாமி, டி. ஜனார்த்தன், வி. சத்தியமூர்த்தி, எம். சின்னச்சாமி, கே. லோறன்ஸ், எம். தென்னவன், பேராசிரியர் பொன்னுசாமி (கல்வி). மேலூர் எம். பரமசிவம், கே. பி. பட்டாபிராமன், டி. வி. [illegible]சன் பால்ராஜ், பி. ஈஸ்வரமூர்த்தி. (ஒ-எ)

## செஞ்சிலுவை புதிய பிரதிநிதி யாழ். வந்தார்

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதியாக புதிதாக நியமனம் பெற்றுள்ள திரு. பியட் சுவிஸ்ஸர் நேற்று யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார்.

விமானமூலம் பலாலி வந்து சேர்ந்த அவர் காங்கேசன் துறையில் இருந்து 'குமண' கப்பல் மூலம் பருத்தித் துறையை வந்தடைந்தார்.

புதிய பிரதிநிதி [illegible] தனது பதவியைப் பொறுப்பேற்பார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

பாவித்த சிங்கர் கையல் மெஷினும், Dressing Table உம் விற்பனைக்கு உண்டு. இல: 3, சீனியர் லேன், (தட்டாதெரு சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம்.
(25671)

### தேவை

பிரபல வியாபார நிறுவனம் ஒன்றுக்கு காசாளரும், பொருள் விநியோகப் பிரிவுக்கு பாதுகாப்பு உத்தியோகஸ்தர் தேவை இருசாராரும் 10 வருடத்துக்கு குறையாத அனுபவத்துடனும் கல்வித்தராதர அத்தாட்சிப் பத்திரங்களுடனும் நேரில் தொடர்பு கொள்ளவும் இல. 234. (New Number) கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். (சி-4761)

### துளிர்

சிறுவர்களுக்கான அறிவியல் மாத இதழ் மற்றும் சுபமங்களா, சலனம், விருட்சம், குன்றின் குரல் போன்ற சஞ்சிகைகளும் தரமான புத்தகங்களும் விற்பனையாகின்றன. விவரங்களுக்கு வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி றோட், (புதிய பஸ் நிலையம் முன்), யாழ்ப்பாணம்.
(6177)

### பெயர் மாற்றம்

யாழ் நகரை வதிவிடமாகக் கொண்ட "கணேசா" ஆகிய எனது பெயர் K.V. Kanesa lingam என மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பதை சகலருக்கும் அறியத்தருகிறேன். K V. Kanesalingam. 298, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.
(25537)

### OLIVETTI (சிறியரகம்)

புதிய தட்டச்சு இயந்திரங்கள் (ஆங்கிலம்) விற்பனைக்குண்டு. 12 மாத காலம் விற்பனைக்கு பிந்திய சேவை இலவசமும், ஒரு வருட கால உத்தரவாதமும் வழங்கப்படும். விற்பனை நிலையத்தில் பார்வையிடலாம். கலக்சி புகைப்பட சேவை, 337/1, 1வது மாடி, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
(சி-4752)

### றோணியோ

நூறு இரண்டு பக்க றோணியோ பிரதிக்கு 30ரூபா மட்டுமே அறவிடப்படுகிறது. அறிவகம் புத்தகசாலை, 374, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (சி 4755)

### ENGLISH

English Grammar For G A. Q (E S L), Spoken English, G. C E. (O/L) விரிவான விளக்கத்துடன் ஆங்கிலம் தனிப்பட்ட முறையிலும், பொதுவாகவும் கற்பிக்கப்படுகிறது Mr. R Sivalingam (Dip - in - English) புதிய ஆங்கிலக் கல்வி நிலையம், ஆரியகுளம் யாழ்ப்பாணம். (சி 5131)

### சோதிடம்

பன்னாலையில் ஜாதகம் எழுதித் தந்தவர்கள் தற்பொழுது இ. சபாரத்தினக் குருக்கள், இளைப்பாறிய அதிபர், இல 333/1, ஆடியபாதம் வீதி, கல்வியங்காடு, நல்லூர் என்ற முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.
(25688)

**SCIENCE ACADEMY**
**NALLUR**
**O/L**
பகல்நேர வகுப்புகள் நடைபெறுகின்றன
வாரத்தில், நான்கு நாட்கள்.
(சி 4760)

---

## திருமண வாழ்த்து

**திரு. ஸ்ரீஸ்கந்தகுமார்**
(கணக்கியல் ஆசிரியர்)

**செல்வி கண்ணம்பாள்**
(சங்கீத ஆசிரியை)

இத் தம்பதிகளுக்கு எமது இதய பூர்வமான
திருமண வாழ்த்துக்கள்

92 ஆம் ஆண்டு வர்த்தக மாணவிகள்
நிரு கல்வி நிலையம்,
கோண்டாவில்.
(சி-2010)

---

## BECON

**பாரதிதாசன் கல்வி நிறுவனம்**
யாழ்ப்பாணம்

**O/L DAY CLASS - 1993**

ஆரம்பம்: 18 - 05 - 1993 8. 0) a. m

| | | |
|---|---|---|
| விஞ்ஞானம் | — | இரா. செல்வவடிவேல் |
| கணிதம் | — | இரா. அருட்செல்வம் – சதீஸ் |
| சமூகக்கல்வி | — | கே. எஸ் முத்துலிங்கம் |
| தமிழ் | — | கோப்பாய் சிவம் |
| ஆங்கிலம் | — | P. தவராஜா |
| வர்த்தகம் | — | T. ராஜன் |
| சமயம் | — | K நாகேஸ்வரன் |

வாரத்தில் நான்கு வகுப்புகள் நடைபெறும்.
(சி 5133)

---

## ஈவ்லின் இரட்ணம் பல்லினப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்

கருத்தரங்கு: இந்திய அரசியல் யாப்பில்- சிறுபான்மையோர் காப்பீடு

உரை வழங்குபவர்: கலாநிதி கே. எஸ் நாதன், சிரேஷ்ட விரிவுரையாளர், அரசறிவியல் துறை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

தலைமை: நிரு. எஸ். சகாயசீலன், அரசறிவியல் துறை விரைவுரையாளர், யாழ்ப்பாணக்கல்லூரி

காலம்: 20 — 05 — 1993 வியாழன் பிற்பகல் 3-30 மணி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இயக்குநர்,
ஈ இ ப. நி
(சி-5116)

---

## நன்றி நவிலல்

அருட்திரு.
**ஆபரணம் சிங்கராயர்** (அ ம தி)

12-05 93 அன்று நடைபெற்ற அருட்திரு ஆபரணம் சிங்கராயரின் (அ. ம. தி.) இறுதி யாத்திரையில் பங்குபற்றிய குருக்கள், கன்னியர்கள், தமிழீழ விடுதலைப் புலிகள், தமிழீழ காவற்துறையினர், முன்னாள் பாலம் பணிமனை நிர்வாகிகள், ஊழியர்கள், உற்றார், உறவினர், நண்பர்கள், போது மக்களுக்கும் மற்றும் அனுதாபங்களைத் தெரிவித்த அனைவருக்கும்—

எமது உளமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சகோதரர்கள், சகோதரி
22/1, சென் பற்றிக்ஸ் வீதி,
யாழ்ப்பாணம்.
(25703)

---

## நன்றி நவிலல்

**திருமதி சிவபாக்கியம் லோகநாதன்**

கடந்த 11-05-1993 அன்று இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வம் திருமதி சிவபாக்கியம் லோகநாதன் அவர்கள் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்த வேளையில் சேவை புரிந்த மருத்துவப் பெரியோர்கள், மற்றும் மருத்துவத்துறை சார்ந்தவர்கள், நோயாளர் நலன்புரிச்சங்கப் பராமரிப்பாளர்கள் ஆகியோருக்கும், எல்லா வழிகளிலும் உதவி புரிந்த நண்பர்கள், அயலவர்கள், உறவினர்களுக்கும், அன்னாரின் இறுதிச் சடங்குகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் எமது நன்றிகள்.

— குடும்பத்தினர்.

"கோசலக்கா",
64, மருதடி வீதி,
நல்லூர்.
(25702)

---

## விளையாட்டு நிகழ்வுகள்

"உதயன்" நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ் மிஃரவுண் றோட்டறக்ட் கழகம் நடத்தும் கூடைப்பந்தாட்டப்போட்டியின் இறுதிக் கட்ட ஆட்டங்கள் இன்று மாலை 3 00 மணி முதல் யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் இடம் பெறும்.

மூன்றாம் இடத்தைப் பெறும் அணியைத் தெரிவு செய்வதற்காக நடைபெறும் முதலாவது ஆட்டத்தில் சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணியை எதிர்த்து ஜெனியன் (சிவப்பு) அணி மோதும்.

தொடர்ந்து நடைபெறும் இறுதியாட்டத்தில் ஷ்ப்றா அணியை எதிர்த்து பற்றிஷியன் (கோல்ட்) அணி மோதும்.

இறுதியாட்ட நிகழ்வுகளுக்கு யாழ். இந்துக் கல்லூரி அதிபர் திரு ஏ. பஞ்சலிங்கம் பிரதம விருந்தினராகவும் — 'உதயன்' பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு ம. வ. கானமயில்நாதன், விளையாட்டு அபிவிருத்திக் குழுவின் செயலாளர் திரு முருகநேசன் ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர்.

o o o

"உதயன்" கிண்ணத்திற்காக பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் — ஏழு பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான — உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை பருத்தித்துறை திக்கமுனை மைதானத்தில் நடைபெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் கழக அணிகள் வருமாறு:-

★ கழுகுகள் அணி எதிர் நவசக்தி அணி.

★ பருத்தித்துறை ஐக்கிய வி. க. அணி எதிர் நக்கீரன் வி. க. அணி

(உ)

## வீடுபார்க்கச் சென்றவர் மிதிவெடியில் சிக்கினார்

### பெரியவிளானில் நேற்றுச் சம்பவம்

தாம் கொண்டுவந்த தேங்காய் தவறிக் கீழே விழுந்த போது, அதனை எடுக்க வீதியின் ஓரமாகச் சென்றவர் மிதிவெடியில் சிக்குண்டார். அவரின் இடதுகால் முழங்காலுக்குக் கீழ் துண்டிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்று பெரிய விளானில் இடம்பெற்றது

பெரிய விளானைச் சேர்ந்த வெனி கசில்டா அல்போன்ஸ் (வயது 24) என்பவரே காலை இழந்தவர் ஆவார். அவர் தற்போது யாழ் போதனா வைத்திய சாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இடம்பெயர்ந்திருக்கும் அவர் சம்பவதினம் தமது வீட்டைப் பார்த்து விட்டு அங்கிருந்து சில பொருள்களுடன் திரும்பி வந்து கொண்டிருந்த சமயம் இந்தச் சம்பவம் இடம் பெற்றது. (இ-15)

## ஏப்ரல் மாத நிவாரணத்தை 20க்கு முன் முடிக்க பணிப்பு

யாழ்ப்பாணம், மே 17

இடம்பெயர்ந்தோருக்கான ஏப்ரல் மாத முதல் இருவார உலர் உணவு நிவாரண விநியோகத்தை எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் முடிக்க வேண்டும்.

இப்படியான அவசர அறிவிப்பு ஒன்றை யாழ். செயலக புனர்வாழ்வு பிரிவு சகல ப. நோ. கூ. சங்கங்களுக்கும், உதவி அரச அதிபர்களுக்கும் விடுத்துள்ளது.

இடம்பெயர்ந்தோருக்கான உலர் உணவு நிவாரண விநியோகம் ஏப்ரல் மாதம் முதல் உணவு முத்திரை மூலம் வழங்கப்பட்டு வருகிறது

முத்திரை வழங்குவதில் ஏற்பட்ட தாமதத்தால் பல பகுதிகளில் உணவு விநியோகம் மேற்கொள்ளப்படவில்லை.

இதனை அடுத்து உடனடியாக உணவு விநியோகத்தை மேற்கொண்டு எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன் முடிக்க வேண்டும் என்று புனர்வாழ்வுப் பிரிவு பணிப்புரை விடுத்துள்ளது.

அதேவேளை — ஏப்ரல் மாதத்தின் கடைசி இரு வாரங்களுக்கான உணவுப் பொருள்களை இன்று முதல் செயலகத்தில் ப நோ. கூ. சங்கங்கள் பெறலாம் என்றும் புனர்வாழ்வுப் பிரிவு பணிப்புரை விடுத்துள்ளது

(ஓ 3)

---

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி

## ஆண்டு - 1 அனுமதி - 1994

மேற்படி வகுப்புக்கு மாணவர்களை அனுமதிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன விண்ணப்பதாரி 01 – 02 - 1988ற்கும் 31 – 01 - 1989ற்கும் இடையில் பிறந்தவராயிருத்தல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களைக் கல்லூரி அலுவலகத்தில் ரூபா 10/- செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 30 - 06 - 1993 புதன்கிழமை நண்பகல் 12 00 மணிக்கு முன்னர் அலுவலகத்தில் ஒப்படைக்கவும்.

- அதிபர்.

(சி/5126)

---

## மரண அறிவித்தல்

**அ. வ. தம்பையா**

காரைநகர் கோவளத்தை வதிவிடமாகவும், தற்போது கஸ்தூரியார் ஒழுங்கையில் வசித்து வரும் ஹொரணை வர்த்தகருமாகிய அ. வ. தம்பையா காலமாகி விட்டார்.

இவர் காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், பரஞ்சோதி (தபாலதிபர், காரைநகர்), துரைராசா, அருளையா, கணேசன், சிறிஸ்கந்தராசா (லண்டன்), செல்வராசா (கனடா), அன்னலட்சுமி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகேஸ்வரி, தனலட்சுமி, புவனேஸ்வரி, கணபதிப்பிள்ளை, ஈஸ்வரி, சுபத்திரா (U.K.), தேவநாயகி (கனடா) ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று 17-5-93 திங்கட்கிழமை பி. ப. 2 மணிக்கு இல. 7, கஸ்தூரியார் ஒழுங்கை, யாழ்ப்பாணத்தில் நடைபெற்று கோம்பையன் மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும் உறவினர்களும், நண்பர்களும் இத்தகவலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
த. அருளையா
(மகன்)
(25708)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### பந்து அவரிடமே!

இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கும் பொருட்டு தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே. பிரபாகரனுடன் நேரில் பேசுவதற்குத் தாம் விரும்புவதாகப் புதிய ஜனாதிபதி திரு. டி. பி. விஜேதுங்கா கடந்த வாரம் தெரிவித்திருந்தார். அதன் தொடர்ச்சியாக, திரு. பிரபாகரனுடன் பேசுவதற்குத் தான் எப்போதும் தயாராக இருப்பதாகவும், அதற்கு எவரேனும் உதவி புரிந்திடலாம் என்றும் ஜனாதிபதி இப்போது அழுத்திக் கூறியிருக்கிறார்.

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேசி, தமிழ் மக்கள் சார்பில் அவர்கள் ஏற்றுக்கொள்ளும் ஒரு திட்டம் உருவாக்கப்பட வேண்டும். இதுவே யதார்த்த நிலை. யுத்தம் தொடங்கிய கடந்த மூன்று வருட காலமாக, கொலையுண்ட ஜனாதிபதி பிரேமதாசாவும் அவரது சகாக்களும் இந்த யதார்த்தத்தைப் பார்க்க விரும்பாமல் கண்ணை மூடிக்கொண்டார்கள்; அல்லது முகத்தைத் திருப்பிக்கொண்டார்கள்!

கொலையுண்ட ரஞ்சன் விஜேரத்தினா முதல் இப்போது ஜனாதிபதியாக வந்திருக்கும் விஜேதுங்கா, இன்றைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா வரை அவர்களுக்கும் கீழே பணிபுரிந்த ஜோன் அமரதுங்கா, சிறில் ரணதுங்கா, ஹமில்டன் வனசிங்கா, பிரட்மன் வீரக்கோன், சிசில் வைத்தியரத்னா என்று எல்லோரும் விடுதலைப் புலிகளிடம் இருந்து ஆயுதங்களைக் களைந்த பின்னரே அவர்களுடன் பேச்சுவார்த்தை என்ற கீறல் விழுந்த இசைத்தட்டையே மீட்டுக்கொண்டிருந்தார்கள். விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைத்தால்தான் அவர்களுடன் பேச்சு என்றும் இடைக்கிடை மறுவளமாகக் கூறிவந்தனர்!

தமிழர்களுக்கு ஏற்புடைத்தான தீர்வுத் திட்டம் ஒன்று குறித்து இணக்கம் காணப்படும் வரை, விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கீழே வைக்க முடியாது; வைக்க மாட்டார்கள் என்பது பிரேமாவுக்கும் சகாக்களுக்கும் தெரியும். ஆகையால் பேச்சுவார்த்தை மூலமான அரசியல் தீர்வு வழியை புறந்தள்ளிவிட்டு, இராணுவத் தீர்வு வழி நாடுவதற்காக அப்படி ஒரு நிபந்தனையைக் கூறிக் கோடு கீறினார்கள்!

இப்போது தம்மிடம் சர்வ அதிகாரமும் பதவியும் வந்த பின்னர் (பிரேமாவின் பிரதமரான) புதிய ஜனாதிபதி எந்த நிலைப்பாட்டுக்கு வந்திருக்கிறார் என்பது இன்னும் தெளிவாக இல்லை. முந்திய நிலைப்பாட்டைக் கடைப்பிடிக்க வேண்டும் என்ற நிர்ப்பந்தம் அவருக்கு இல்லை. தனக்கென ஒரு புதிய வழியை, புதிய நிலையை உருவாக்கிக் கொள்வதற்கு அவரிடம் சக்தியும் அதிகாரமும் நிறைய உள்ளன. ஆனால் மனவிருப்பமும், துணிவும்......?!

சொல்வதையே செய். செய்ய முடியாததைச் சொல்லாதே என்ற புத்தநெறியையே தாம் அரசியலில் கைக்கொள்ளப் போவதாக புதிய ஜனாதிபதி நாட்டு மக்களுக்கு விடுத்த முதலாவது செய்தியில் குறிப்பிட்டிருந்தார். அது நல்லது தான்.

சொல்வது ஒன்று; செய்வது அதற்கு முரணானது என்ற பிரேமாவின் வழுநெறியைத் துறந்து தாம் நன்நெறியில் செல்வார் என்பதை விஜே முதலில் நிரூபித்தாக வேண்டும். அதற்குப் பல படிகளிலும், பல கட்டங்களிலும் நல்லெண்ணத்தைக் காட்ட வாய்ப்புண்டு. பொருளாதாரத் தடையை நீக்குதல், போக்குவரத்துத் தடையை நீக்குதல், யுத்த நிறுத்தம் கொண்டு வருதல் என்று பல முக்கிய படிகள் தாண்டப்பட வேண்டும்.

அவ்வாறு செய்வதன் மூலம் மட்டுமே பேச்சுவார்த்தைக்கான சூழ்நிலை உருவாகும். அதற்கு உதவும் மகத்தான சேவை செய்வதற்கு விருப்பமுடையோரும் அதில் ஈடுபடத் துணிவர் எனவே பந்து டி பியின் பக்கமே அன்றி புலிகளின் பக்கமோ அல்லது உதவ விரும்புவோர் பக்கமோ அல்ல என்பதனை அவர் உணரட்டும்!

மீண்டும் வீடு சேதமடைந்தவர்களிடம்

# கடன்களை அறவிடுவதை ரத்து செய்யுமாறு கோரிக்கை

உடுவில், மே 17

புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சிடமிருந்து வீடமைப்புக் கடன் பெற்று, சேதமடைந்த வீடுகளைக் கட்டியவர்களின் வீடுகள் மீண்டும் சேதமடைந்திருப்பின், அவ்வீட்டு உரிமையாளர் முதலில் பெற்ற கடனை அறவீடு செய்வதை ரத்து செய்ய வேண்டும்.

இவ்வாறான கோரிக்கை ஒன்றை தேசிய வீடமைப்பு அதிகார சபையின் யாழ் மாவட்ட தலைவர் புனர்வாழ்வு, புனரமைப்பு அமைச்சுக்கு விடுத்துள்ளார்.

1993 ஆம் ஆண்டுக்குரிய வீடமைப்பு நிவாரண கடன்களை வழங்க மேற்படி சபை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகவும்,

யாழ். மாவட்டத்திலுள்ள மாநகர சபை மற்றும் நகர சபைகளுக்கு இவ்வருடம் வழங்கப்படக்கூடிய நிவாரணக் கடன்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

எவ்வித வருமானமும் அற்ற விதவைகள், தொழில் செய்யும் ஆற்றல் இல்லாத பிரதான உழைப்பாளியை இழந்த குடும்பங்களுக்கே இந்த நிவாரணக் கடன்கள் வழங்கப்படும். (த-158)

### தாதிகள் நேர்முகத் தேர்வு

யாழ்ப்பாணம், மே. 17

பயிற்சி பெற்ற பெண் தாதிகளுக்கான நேர்முகத் தேர்வு ஒன்று இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திருநெல்வேலி முத்துத்தம்பி ஆரம்பப் பாடசாலைக்கு முன்பாக உள்ள மகளிர் அலுவலகத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்படுகின்றது. (த)

'உதயன்' ஆதரவில்

## விஞ்ஞான வினாடி வினா இறுதிச் சுற்று சனியன்று

'உதயன்' நிறுவனத்தின் ஆதரவுடன் யாழ் மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையத்தினர் பாடசாலை மாணவர்களிடையே நடத்தும் வினாடி வினா போட்டியின் இறுதிச் சுற்றுப்போட்டி எதிர்வரும் சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பரியோவான் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

மாவட்ட மட்டத்தில் நடைபெறும் இந்த இறுதிச் சுற்றுப் போட்டியில் வெற்றி பெறுவோருக்கு உதயன் வெற்றிக் கிண்ணங்களும், சான்றிதழ்களும் அன்றைய தினம் வழங்கப்படும்.

மாணவர்களிடையேயும், ஆசிரியர்களிடையேயும் கணித, விஞ்ஞான பாடங்களில் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் யாழ். மாவட்ட கணித, விஞ்ஞான மூலவள நிலையம் உதயன் நிறுவனத்தின் ஆதரவுடன் ஆண்டுதோறும் இப்போட்டியை நடத்தி வருகின்றது.

ஆண்டு 6 முதல் 11 வரையான வகுப்பு மாணவரிடையே நடத்தப்பட்ட முதற் சுற்றுப் போட்டியில் மாவட்ட மட்டத்தில் 360 மாணவர்கள் பங்கு பற்றியிருந்தனர்.

இவர்களில் ஒவ்வொரு வகுப்பிலும் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு உதயன் வெற்றிக் கிண்ணங்களும், ஏனையோருக்கு சான்றிதழ்களும் அன்றைய தினம் வழங்கப்படும். (த-5)

கோப்பாய் உ. அ. அ பிரிவில்

## வாழைத் தோட்ட அழிவுகள்; நட்டஈட்டு தொகை வழங்கல்

கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் வாழைத் தோட்ட அழிவுகளுக்கான கொடுப்பனவுகள் நாளை செவ்வாய் காலை 8 மணிக்கு கீழ் குறிப்பிட்ட நிலையங்களில் வழங்கப்படவுள்ளன.

கோப்பாய் வடக்கைச் சேர்ந்தவர்களுக்கு கோப்பாய் வடக்கு கிராமசேவை உத்தியோகத்தர் அலுவலகத்திலும் —

கோப்பாய் தெற்கு, கோப்பாய் மத்தி, கல்வியங்காடு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு கோப்பாய் விவசாய உற்பத்தி நிலையத்திலும் —

நீர்வேலி வடக்கைச் சேர்ந்தவர்களுக்கு நீர்வேலி வடக்கு கிராமசேவை உத்தியோகத்தர் அலுவலகத்திலும் —

நீர்வேலி தெற்கை சேர்ந்தவர்களுக்கு நீர்வேலி தெற்கு கிராமசேவை உத்தியோகத்தர் அலுவலகத்திலும் —

நீர்வேலி மேற்கைச் சேர்ந்தவர்களுக்கு நீர்வேலி மேற்கு கிராமசேவை உத்தியோகத்தர் அலுவலகத்திலும் —

உரும்பராய் கிழக்கு, வடக்கு, மேற்கு, தெற்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தவர்களுக்கு உரும்பராய் தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்திலும் —

ஊரெழுப் பகுதியைச் சேர்ந்தவர்களுக்கு ஊரெழு கிராம சேவை உத்தியோகத்தர் அலுவலகத்திலும் வைத்து கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

தேசிய அடையாள அட்டை, குடும்பப் பதிவு அட்டை, உலர் உணவு அட்டை என்பனவற்றுடன் பிரதான குடியிருப்பாளர் நேரடியாகச் சமுகமளித்து நஷ்டஈட்டுப் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது. (த-162)

காங்கேசன்துறையில்

## மீண்டும் பொலீஸ் நிலையம் திறக்கப்பட்டுள்ளதாம்!

காங்கேசன்துறையில் கடந்த திங்கட்கிழமை மீண்டும் பொலீஸ் நிலையம் ஒன்று திறக்கப்பட்டுள்ளதாம்!

முன்னாள் வட்டுக்கோட்டை எம். பி. திரு. திருநாவுக்கரசுவின் வீட்டிலேயே இந்தப் பொலீஸ் நிலையம் அமைந்துள்ளது.

ஒரு இன்ஸ்பெக்டர் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் மற்றும் 12 கான்ஸ்டபிள்கள் அங்கு பணியாற்றுகின்றனர் என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவிக்கின்றது (த-எ)

## தமிழர் தாயகத்தை அங்கீகரிக்க வேண்டும்

### நவசமசமாஜக் கட்சி பிரமுகர் பேட்டி

"வடக்கு-கிழக்குப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வே அவசியமானது. தமிழர்களின் பாரம்பரிய தாயகம் அங்கீகரிக்கப்பட்டு இணைந்த ஒரே மாகாணசபை முறை ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும். அதிகாரப் பரவலாக்கல் விரிவாக்கப்பட வேண்டும். அப்பகுதிகளில் வாழும் பிற இன மக்களான முஸ்லிம்களுக்கும், சிங்களவர்களுக்கும் அவர்களது உரிமைகளைப் பாதுகாப்பதற்காக துணை மாகாண சபைகள் ஏற்படுத்தப்படலாம். தமிழர்களுக்கு சுயநிர்ணய உரிமையும் வழங்கப்பட வேண்டும். தாங்கள் விரும்பியவாறு முடிவு எடுக்க அவர்களுக்கு உரிமை வழங்கப்பட வேண்டும்."

நவசமசமாஜக் கட்சியின் அமைப்புச் செயலாளரும், அரசியற் குழுவின் பிரதிநிதியுமான ஜீ. வீ. டி. திலகசிறி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பி. பி. ஸியின் சிங்கள சேவைக்கு வழங்கிய பேட்டி ஒன்றிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

வடக்கு - கிழக்குப் பிரச்சினைக்குரிய தீர்வு அந்த மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக அமைதல் வேண்டும். அந்தப் பிரச்சினையை தீர்ப்பதில் ஐக்கிய தேசியக் கட்சி ஆர்வம் கொண்டிருக்கவில்லை எதிர்க்கட்சியிடமும் தீர்வுக்குரிய திட்டம் இல்லை.

தற்போதைய அரசைக் கவிழ்த்து விவசாயிகளும், தொழிலாளிகளும் ஒன்றிணைந்து அரசமைக்க வேண்டும் தற்போதைய மாகாண சபைத் தேர்தல் ஒவ்வொரு கட்சிக்கும் தத்தம் பலத்தைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குகின்றது — இப்படி அந்தப் பேட்டியில் அவர் மேலும் தெரிவித்தார். (த-5-6)

## குறைந்த செலவில் கம்உதாவ தொடர்ந்து நடத்துவேன்!

### விஜேதுங்க சொல்கிறார்

கொழும்பு, மே 17

மறைந்த ஜனாதிபதி பிரேமதாஸா பெரும் செலவுடன் நடத்தி வந்த (கம்உதாவ) கிராம எழுச்சித் திட்டத்தை குறைந்த அளவு செலவுடன் தொடர்ந்து அமுல் நடத்தவிருக்கிறேன்.

ஜனாதிபதி விஜேதுங்கா கண்டியில் செய்தியாளர்கள் மாநாட்டில் இத் தகவலை வெளியிட்டார்.

நாட்டின் நிர்வாகத்தை மறுசீரமைத்துப் பலப்படுத்தப் போவதாகவும் அவர் குறிப்பிட்டார். (த-எ)

## சு. க. எம். பிக்களைத் தாக்கி சிறிமா பகிரங்கப் பேச்சு

களுத்துறை மாவட்ட சுதந்திரக் கட்சி எம். பிக்களான டாக்டர் நெவில் பெர்னாண்டோவையும் திலக் கருணாரத்னாவையும் சுதந்திரக்கட்சித் தலைவியான திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா களுத்துறை மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் பகிரங்கமாகத் தாக்கிப் பேசினார்.

இது தென் இலங்கை சுதந்திரக் கட்சி வட்டாரங்களில் கவலையை ஏற்படுத்தி இருப்பதாக அரசுப் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

டாக்டர் நெவில் பெர்னாண்டோவும் திலக் கருணாரத்னாவும் கட்சிக்குள் எதிர்ப்பைத் தெரிவிப்பவர்கள் என்றும்—

கட்சித் தலைமைப் பதவியில் இருந்து திருமதி பண்டாரநாயக்கா பதவி விலக வேண்டும் என்று திரு. திலக் கருணாரத்னா வற்புறுத்தி வருபவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. (த-எ)

மாகாண சபைத் தேர்தல்:

## வாக்குப் பெட்டிகளுடன் பிரதிநிதிகள் செல்லத் தடை

கொழும்பு, மே 17

மாகாணசபைத் தேர்தலில் அளிக்கப்பட்ட வாக்குகளை, வாக்குகள் எண்ணப்படும் நிலையங்களுக்கு எடுத்துச் செல்லும் வாகனங்களில் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும் கூடச் செல்ல அனுமதிக்கப்பட வேண்டும் என எதிர்க்கட்சிகள் விடுத்த கோரிக்கையை தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டி. சில்வா நிராகரித்து விட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

எனினும்— வாக்குப்பெட்டிகளை எடுத்துச் செல்லும் வாகனங்களின் பின்னால் கட்சிப் பிரதிநிதிகள் வேறு வாகனங்களில் செல்ல அனுமதிக்குமாறு தேர்தல் ஆணையாளர் பொலீஸ் மா அதிபரிடம் தெரிவித்துள்ளார். (த-எ)

## நாவாந்துறைப் பகுதிக்கு தற்காலிக மலசலகூடங்கள்

அரியாலை, மே 17

நாவாந்துறையின் சோலைபுரம், சண்ணகிபுரம், மண்பிட்டி ஆகிய மக்கள் குடியிருக்கும் கரையோரப் பகுதிகளில் தற்காலிகமாக 50 பொது மலசலகூடங்களை அமைத்துக் கொடுக்க யாழ். மாநகரசபை துரித நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

இப்பகுதிகளில் பொது மலசல கூடங்கள் இல்லாமை சுட்டிக்காட்டப்பட்டதைத் தொடர்ந்து யாழ் பிரதேச செயலாளர் திரு. கே. குணராசா யாழ். மாநகர ஆணையாளர் பொ. பாலசிங்கத்துடன் தொடர்புகொண்டதை அடுத்து குறைந்த பட்சம் 50 மலசல கூடங்களை அப்பகுதி மக்களுக்கு அமைத்துக் கொடுக்க உறுதியளிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து முதற்கட்டமாக 50 தற்காலிக பொது மலசல கூடங்கள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன. (த-17)

### சான்றிதழ்கள் வழங்கப்பட்டன

திருநெல்வேலி, மே 17

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகினால் நடத்தப்பட்ட புகைப்படக் கலை பயிற்சி நெறியினைப் பூர்த்திசெய்து கொண்ட நூறு மாணவர்களுக்கு அண்மையில் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக கலைத்துறைப் பீடாதிபதி திரு. பொ. பாலசுந்தரம் பிள்ளை இவர்களுக்கான சான்றிதழ்களை வழங்கினார். (த-143)

### தேர் வெள்ளோட்டம்

உரும்பராய் கிழக்கு, கோப்பாய், கரந்தன், நீர்வேலி ஆகிய ஊர்களின் மத்தியில் வீற்றிருக்கும் செவ்வந்த நாதேஸ்வரர் தேவஸ்தானத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்டம் இன்று திங்கள் பிற்பகல் 3-30 மணிக்கு வெள்ளோட்டக் கிரிகைகளுடன் ஆரம்பமாகி நடைபெறும். [த]

### 'சிரித்திரன்' வெளிவந்தது

யாழ்ப்பாணம், மே 17

"சிரித்திரன்" நகைச்சுவை மாத சஞ்சிகையின் பங்குனி, சித்திரை, வைகாசி மாதங்களுக்குரிய இதழ் வெளிவந்துள்ளது

புதிய அமைப்புகளும் பல துறை சார்ந்த அம்சங்களுடன், பல புதிய நகைச்சுவைப் பகுதிகளுடனும் இந்த இதழ் வெளிவந்திருக்கிறது. (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## அப்பையா இராசநாயகம்

இணுவில் தெற்கைச் சேர்ந்த அப்பையா இராசநாயகம் அவர்கள் 14 05.93 அன்று காலை இறைவனடி சேர்ந்தார். இவர் காலஞ்சென்ற சீனியர் அப்பையா - சொர்ணம்மா தம்பதிகளின் மூத்த மகனும், காலஞ்சென்ற சற்குணம் - முத்துப்பிள்ளை தம்பதிகளின் மூத்த மருமகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், செல்வநாயகத்தின் (கணேசன் அரிசி ஆலை) அன்புச் சகோதரரும், மயூரநாதன் (கணேசன் ரெக்ஸ்டைல்ஸ் மில்), ஜெயலட்சுமி, பற்குணன், சற்குருநாதன் (ஐங்கரன் அரிசி ஆலை), சிவகுருநாதன் ஆகியோரின் அன்புத் தந்தையும், பரிகுணன் (பொறியியலாளர் P.M B. கொழும்பு), தயாவதி, பாமதி, செந்தில்மதி ஆகியோரின் அன்பு மாமனாரும், பிரபாலினி (உடுவில் மகளிர் கல்லூரி), தினேஸ்குமார் (கொக்குவில் இந்துக் கல்லூரி), கஜந், மாதுளன் (கொழும்பு இண்டர்னேஷனல் கல்லூரி), சிந்தூரன் ஆகியோரின் பேரனும், அன்னலட்சுமி, செல்வநாயகம், செல்வநாயகம் (இளைப்பாறிய ஆசிரியர்), மகாதேவன், நடராசா, சிவனேசம், காலஞ்சென்ற பரமேஸ்வரி, கமலாதேவி, அன்னபூரணம் ஆகியோரின் அன்பு மைத்துனரும், பஞ்சலிங்கம் (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சுப்பிரமணியம், காலஞ்சென்ற இராசையா (A. V. R), தம்பிராசா ஆகியோரின் சகலனும், பாலகுமாரன் (யாழ். இந்துக் கல்லூரி), உமாகாந்தன் (யாழ். இந்துக் கல்லூரி), சாந்தினி முத்துலிங்கம், ஸ்ரீதரன் (புறாணை), வசந்தி பாலசுப்பிரமணியம், சுமதி சின்னராசா, சுமங்கலா, குகவரதன் (U. K), சத்தியா, உதயகுமாரன், புனிதா, பத்மா, சந்திரகுமார் (லயிட் சேவிஸ்) ஆகியோரின் பெரிய தந்தையும், காலஞ்சென்ற சின்னையா, காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை ஆகியோரின் பெறாமகனும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் மற்றும் ஆச்சிமுத்து (குரும்பசிட்டி), காலஞ்சென்ற அப்புத்துரை மற்றும் நல்லம்மா (தாவடி), காலஞ்சென்ற காசிநாதன் மற்றும் அன்னலட்சுமி (இணுவில்), காலஞ்சென்ற செல்லத்துரை மற்றும் இரத்தினம் (இணுவில்) ஆகியோரின் சம்பந்தியும் ஆவார்.

ஈமக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

தகவல்:
இ. சற்குருநாதன் (மகன்)

இணுவில் தெற்கு.
(25704)

திருமதி

## சௌந்தரிதேவி சண்முகநாதன்

நல்லூர் செட்டித்தெருவைச் சேர்ந்த திருமதி சௌந்தரிதேவி சண்முகநாதன் நேற்று (16-05-1993) காலை காலமானார்.

அன்னார் சபா. சண்முகநாதனின் அன்பு மனைவியும், செந்தூரன் (கொழும்பு), சாருகேசன் (மத்திய கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், காலஞ்சென்ற மலாயன் பென்சனியர் திரு திருமதி கந்தையா (சிங்கப்பூர்) அவர்களின் அன்பு மகளும், காலஞ் சென்றவர்களான க. குமாரசாமி, க, தங்கராசா மற்றும் க சுந்தரலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று (17-05- 993) திங்கட்கிழமை காலை 9 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காக பூதவுடல் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சபா. சண்முகநாதன். (கணவன்)

13 (35), செட்டித்தெரு,
நல்லூர்,
[25701]

## கதிரவேலு கணபதிப்பிள்ளை

கைதடியைப் பிறப்பிடமாகக் கொண்ட கதிரவேலு கணபதிப்பிள்ளை கிளிநொச்சியில் காலமானார். இவர் லக்சுமியின் அன்புக் கணவரும், கிருஷ்ணமூர்த்தி, சண்முகநாதன் (இ போ ச கோண்டாவில்), நகுலேஸ்வரி, சேதுலிங்கம் (கனடா), முருகமூர்த்தி (வைத்தியசாலை சாவகச்சேரி), விநாயகமூர்த்தி (பிரான்ஸ்), பரமேஸ்வரி ஆகியோரின் அன்புத் தந்தையும், நாகம்மா, ஞானாம்பாள், நாகராசா (வவுனிக்குளம்), கலாராணி (கனடா), ஐறின் சுகந்தினி (வைத்தியசாலை, சாவகச்சேரி) ஆகியோரின் மாமனாரும் ஆவார். இறுதிக் கிரிகைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்

இவ்வறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் :
க. முருகமூர்த்தி (மகன்)

கைதடி.
(25707)

## நவரட்ணம் வைத்திலிங்கம் (துரை)

சுழிபுரத்தைச் சேர்ந்த நவரட்ணம் வைத்திலிங்கம் (பண். ப. நோ. கூ. சங்கம்) நேற்று பிற்பகல் 2 மணியளவில் காலமானார்.

இவர் பன்னாலைச் சேர்ந்த புவனேஸ்வரியின் அன்புக் கணவரும், இந்துஜனின் தந்தையும், தாமோதரம்பிள்ளை (மலேஷியா), காலம்சென்ற சுப்பிரமணியம், திருமதி. தங்கம கந்தஞானியார், திருமதி. தனலட்சுமி கந்தசாமி (யாழ் போதனா வைத்தியசாலை), திருமதி வள்ளியம்மை கணபதிப்பிள்ளை (ஆசிரியை ஆறுமுக வித்தியாலயம்), திருமதி முத்தீஸ்வரி துரைச்சாமி (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரருமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று திங்கள் பி. ப. 1 மணிக்கு நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க. இளங்கோஞானியார் [மருமகன்]'

''தாமோதரவாசா'
சுழிபுரம்.
(25706)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிடெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2 இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 17 - 05 - 1993 இல் வெளியிடப்பெற்றது.

## மீட்பு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், மே 17

இதுவரை மீட்பு நிதி கடனைச் செலுத்தத் தவறியவர்கள் நாளை மறுதினம் புதன் கிழமை பிற்பகல் 3 மணி தொடக்கம் 4 மணிவரை நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் செலுத்தலாம் என்று அறிவிக்கப்படுகிறது (ஓ)

## விஜேதுங்கவுடன்...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பதாக அறிவித்துள்ளது.

பாரிஸில் உள்ள இந்த இயக்கத்தின் சர்வதேச அலுவலகப் பேச்சாளர் ஒருவர்—

இந்த அமைதிப் பேச்சுக்களில் கலந்து கொள்ள விடுதலைப் புலிகள் முன்வந்துள்ளதாகக் கூறினார்.

இந்தப் பேச்சுவார்த்தை இலங்கைக்கு வெளியே நடைபெறவேண்டும் என்றும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

ஜனாதிபதி விஜேதுங்கா பதவி ஏற்றது முதல் வடக்கு கிழக்கில் உள்ள துன்பச் சூழலை நீக்கவும் கோடிக் கணக்கான ரூபா செலவில் நடக்கும் போரை நிறுத்த அரசு பேச்சு நடத்தத் தயாராக இருப்பதாகவும் கூறி வந்துள்ளார்.

விடுதலைப் புலிகள் அதற்கு இப்போது பதிலளித்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் பேச்சாளர் ஒருவர் பி. பி. ஸி க்குத் தகவல் தருகையில் —

விடுதலைப் புலிகள் பேச்சுகளுக்கு தயாராக இருப்பதாகக் கூறினார்.

ஆனால் போரை நிறுத்துவது அமைதிப் பேச்சுகளுக்கு உதவியாக இருக்கும் என்று விடுதலைப் புலிகள் கூறி வந்துள்ளார்கள்.

வடக்கு — கிழக்கு பகுதிகளில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவில்லை என்று அண்மையில் கூறிய திரு. விஜேதுங்கா, அவர்களைப் பயங்கரவாதிகள் என்று வர்ணித்திருந்தார்.

இதனால் விடுதலைப் புலிகள் தமிழ் மக்களின் விருப்பத்தை, கருத்தை அறிய மக்கள் கருத்து வாக்கெடுப்பு ஒன்றுக்குத் தாம் தயாராக இருப்பதாகக் கூறுகின்றார்கள்.

அமைதிப்பேச்சுகளை நேரடியாக விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் தான் நடத்துவேன் என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறியிருக்கிறார்.

அவர்களுடைய தலைவர் திரு பிரபாகரனின் பாதுகாப்புக்கு யாழ்ப்பாணத்துக்கு வெளியே உத்தரவாதம் இல்லை என்பதால் விடுதலைப் புலிகள் இதற்கு ஒப்புக்கொள்வார்கள் என்று நம்பவில்லை.

தவிர, பிரேமதாசாவின் படுகொலைக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்று பொலீஸார் கூறிவந்துள்ளார்கள்—

இவ்வாறு பி பி ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

(ஓ-எ)

## நிறைவேற்று...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

இவை அனைத்தையும் நாம் ஆராயவேண்டும்! மேலும் எவ்வாறு ஜனநாயகப்படுத்தலாம் என்பதற்கான வழிவகையை நாம் ஆராயவேண்டும்.

விடுதலைப் புலிகள் தமது அபிலாசைகளை எய்துவதற்கு ஆதரவான, நெருக்கமான அரசாங்கம் ஒன்றை விரும்பினால் அவர்கள் பேச்சுவார்த்தைக்கு வரவேண்டும்; எமது கதவுகள் என்றும் திறந்துவிடப்பட்டுள்ளன. நாம் பேச்சுவார்த்தைகளை விரும்புகின்றோம்.

திரு. பிரபாகரன் மறைந்திருக்கிறார். அந்த வகையில் ஜனநாயகத்தைச் செயற்படுத்த முடியாது; அல்லது இரண்டாவது, மூன்றாவது நான்காவது தரப்புக்குஊடாக அதனைச் செய்ய முடியாது. அவர்கள் சிபார்சுகளை முன்வைத்து பேசுவதற்கு முன்வர வேண்டும்.

பத்திரிகைகள் சுதந்திரமாக இயங்கவேண்டும். ஆனால் தம்மால் அரசாங்கத்தை ஆக்கவோ, அழிக்கவோ முடியும் என்றவர்கள் எண்ணிவிடக் கூடாது — இவ்வாறு ஜனாதிபதி தெரிவித்தார். (ஓ-எ)

## 3 மாகாண சபைகளை எதிர்க்கட்சிகள் கைப்பற்றும்

தென்பகுதியில் இன்று நடைபெறும் 7 மாகாணங்களுக்கான தேர்தலில் எதிர்க்கட்சிகள் பெரும்பாலும் மூன்று மாகாணசபைகளைக் கைப்பற்றும் வாய்ப்பு இருப்பதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர் என்று வெரித்தாஸ் வானொலி தெரிவித்தது.

இதேவேளை, பொதுமக்கள் ஐக்கிய முன்னணி ஐந்து மாகாணசபைகளில் வெற்றியீட்டும் என்று திருமதி சிறிமா பண்டாரநாயக்கா ஏற்கனவே தெரிவித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (ஓ-எ)

## அதிபர்கள் கலந்துரையாடல்

மாணவ உணவு முத்திரை, தமிழ்ப் பொதுக் கல்வித் தேர்வு பற்றிய பாடசாலை அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்றும் நாளையும் நடைபெற உள்ளன.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை முற்பகல் 9.00 மணிக்கு மானிப்பாய் இந்துக் கல்லூரியிலும்—

வடமராட்சி கல்விக்கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் இன்று திங்கட்கிழமை பிற்பகல் 2 30மணிக்கு வேலாயுதம் மகா வித்தியாலயத்திலும்—

யாழ். கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கலந்துரையாடல் நாளை செவ்வாய்க்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் நடைபெறும்.

## ஜனாதிபதியின்,..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

மானிக்கப்பட்டுள்ளது.

இதன் மூலம் மீதப்படும் பணத்தை ஓய்வூதியருக்கு 260 ரூபா செலுத்த பயன்படுத்துமாறு விஜேதுங்கா உத்தரவிட்டுள்ளார்.

இப்படி 'லக்திவ' இணை ஆசிரியர் மேலும் தெரிவித்தார் (இ-6)

## உகந்த சூழ்நிலை...

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூலம் பேட்டி அளித்தார்.

திரு. திலகர் சொன்னதாவது;—

விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தைக்கு எப்போதும் தயாராக உள்ளனர். நிபந்தனையில்லாத பேச்சுக்களுக்கு விடுதலைப் புலிகள் எப்போதுமே தயார்.

ஆனால் பேச்சுவார்த்தை ஒழுங்காக நடைபெற வேண்டுமானால் — வெற்றி பெற வேண்டும் என்றால் — அதற்குரிய உகந்த சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும்.

மக்கள் மீது தொடுத்துள்ள போரை அரசாங்கம் நிறுத்தி ஒரு யுத்த நிறுத்தத்தைக் கொண்டு வரவேண்டும்.

பொருளாதாரத் தடைகளை நீக்குவதோடு தென் தமிழீழத்தில் மக்கள் காணாமல் போவதையும் நிறுத்த வேண்டும்.

இப்படியான ஒரு சூழ்நிலையை உருவாக்குகின்ற போது அந்த அடிப்படையில் நடைபெறுகின்ற பேச்சுவார்த்தைதான் வெற்றிபெறவேண்டும்; வெற்றிபெறும் என்று நாங்கள் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றோம்.

கேள்வி:- வடக்கு - கிழக்கில் மக்கள் கருத்தை அறியும் வாக்கெடுப்பை நடத்துவதை முன்பு எதிர்த்து வந்தீர்கள், இப்போது அதற்கு ஒப்புக்கொண்டிருப்பதாகக் கூறப்படுகிறது அதற்கு உங்கள் விளக்கம் என்ன?

திலகர்:- மக்களுடைய கருத்தை ஜனநாயக ரீதியாக இது வெளிப்படுத்தும் என நான் கருதுகின்றேன்.

மக்கள் என்ன விரும்புகின்றார்கள்? 40 வருடகால இன ஒடுக்கு முறையின் விளைவாக மக்கள் எதனை விரும்புகிறார்கள் என்பதை அறிவதற்கு ஒரு ஜனநாயக ரீதியான வாக்கெடுப்பை வடக்கு-கிழக்கு இணைந்த முழுமையான தமிழர் தாயகப் பகுதியில் மக்களுடைய கருத்துக் கணிப்பை எடுக்கும் முயற்சியாக ஜனநாயக வெளிப்பாடாக இத்தகைய ஒரு கருத்துக் கணிப்பை வைத்தல் நலம் என்று நான் கருதுகின்றேன்.

கேள்வி: திரு பிரபாகரனே நேரடியாகப் பேச்சு நடத்த முன்வரவேண்டும் என்று ஜனாதிபதி விஜேதுங்கா கூறியிருப்பதாக தெரிவிக்கப்படுகிறது. இதற்கு விடுதலைப் புலிகள் இயக்கம் ஒப்புக்கொள்ளுமா?

திலகர்: பேச்சுவார்த்தையில் யார் கலந்து கொள்வது என்பதைத் தீர்மானிப்பது விடுதலைப் புலிகளின் மத்திய குழுவே. பேச்சுவார்த்தை ஆரம்பிக்கின்ற கட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்திய குழு, யார் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்வார்கள் என்ற முடிவை எடுக்கும்.

கேள்வி: மாகாணசபைத் தேர்தல் நாளை நடைபெறவிருக்கிறது. இத்தருணத்தில் இந்த சமாதான செய்தியை நீங்கள் விடுத்திருப்பதற்கு என்ன காரணம்?

திலகர்: மாகாணசபைத் தேர்தலுக்கும் நாங்கள் விடுத்திருக்கின்ற சமாதான அறைகூவலுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்று கூறமுடியாவிட்டாலும்—

இப்பொழுதுள்ள சூழ்நிலை சமாதான முயற்சிகளுக்கு வழி வகுக்கும் என்ற நோக்கத்தோடுதான் இந்த அறைகூவல் எப்பொழுதும் போல இம்முறையும் விடுக்கப்பட்டுள்ளது. (ஓ-எ)

# மரண அறிவித்தல்

## முத்துவேலு இராசரெத்தினம்

வேலணை கிழக்கு முதலாம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், தற்போது மைலு வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டையை வசிப்பிடமாகக் கொண்டவருமான முத்துவேலு இராசரெத்தினம் காலமானார்.

இவர் முத்துவேலு —சின்னத்தங்கம் தம்பதிகளின் மகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம், நடராசா, பேரின்பநாயகி ஆகியோரின் சகோதரரும், பரமேஸ்வரியின் மைத்துனரும், வே. சாந்தலெட்சுமி, சாந்தகுமாரி, (பிரான்ஸ்), சாந்தமலர் (கனடா), சாந்தரூபி, சாந்தரூபன் (கனடா), மகேந்திரன் ஆகியோரின் சிறிய தந்தையும், ம. விஜயலெட்சுமி, வேலாயுதநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், கஜேந்திரகுமார், ரமேஸ்குமார், சுரேஸ்குமார், பிரியதர்சினி, விஜயதர்சினி, கஜலக்ஷன், கார்த்திகன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

ஈமக்கிரியைகள் இன்று (17-05-93) திங்கட்கிழமை காலை 10 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
மு. நடராசா

மைலு வீதி,
ஆறுகால்மடம்,
ஆனைக்கோட்டை.
(25705)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org